பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

18 09 2025 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கையொட்டி புதிய சக்தி மற்றும் ஈடுபாட்டுடன் தாம் தொடர்ந்து பணியாற்ற உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் அடுத்த 10 ஆண்டுகளில் 5 லட்சம் முதல் 7 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் பெருமளவில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
- தமிழகத்தில் தருமபுரி, வேலூர், தஞ்சை, நாகை உள்ளிட்ட மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 102 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கையொட்டி புதிய சக்தி மற்றும் ஈடுபாட்டுடன் தாம் தொடர்ந்து பணியாற்ற உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தமது 75வது பிறந்த தினத்தையொட்டி வாழ்த்து தெரிவித்த மக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து சமூக வலைதளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

மக்களின் அன்பு தமக்கு உத்வேகமும், வலிமையையும் அளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமது பிறந்த தினத்தையொட்டி பல்வேறு சமூக சேவைப் பணிகளில் ஈடுபட்டதற்காக மக்களுக்கு அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற முயற்சிகள் சமூகத்தின் நன்மையை பிரதிபலிக்கிறது என்றும், இது நாடு நம்பிக்கையுடனும், நேர்மறையுடனும் சவால்களை எதிர்கொள்ள உதவுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மக்கள் தம்மீது வைத்துள்ள நம்பிக்கை வெறும் தம்மீதான ஆசிர்வாதம் மட்டுமின்றி வளர்ச்சியடைந்த நாட்டை கட்டமைப்பதற்கான கூட்டு முயற்சிக்கானதாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைவரும் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் வாழ தாம் பிரார்த்திப்பதாகவும், தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் பதிலளிக்க இயலவில்லை எனினும்,

மக்கள் காட்டியுள்ள அன்பு தமது மனதில் ஆழமாக இடம்பெற்றுள்ளது என்றும் திரு. மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் அடுத்த 10 ஆண்டுகளில் 5 லட்சம் முதல் 7 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எரிசக்தி துறைக்கான சரக்கு மற்றும் சேவை வரி விகிதம் 12 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதன் மூலம் தூய்மை எரிசக்தி உற்பத்தி திட்டங்களுக்கான செலவுகளை பெருமளவில் குறைக்க உதவும் என்று கூறியுள்ளது.

விவசாயிகள், தொழில்துறையினர் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை வினியோகிக்க இந்த நடவடிக்கை வழிவகுக்கும் என்று தெரிவித்துள்ளது.

சூதிய மின்சகத்தி திட்டத்திற்கான முதலீட்டு செலவினங்களும், சூரிய மின் உற்பத்திப் பூங்கா அமைப்பதற்கான செலவுகளும் குறைவதற்கான வாய்ப்புகள்

ஏற்பட்டுள்ளதாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் பெருமளவில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக முதலமைச்சரும் திமுக தலைவருமான திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கரூர் மாவட்டம் கோடங்கிப் பட்டியில் நேற்று மாலை நடைபெற்ற கட்சி நிகழ்ச்சியில் பேசிய அவர், மாநிலத்தில் இரட்டை இலக்க அளவிற்கு பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

மாநிலத்தில் தமது தலைமையிலான அரசு அமல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களையும் திரு. மு.க. ஸ்டாலின் பட்டியலிட்டார்.

<<<<>>>>

இனி மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்..

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த

நிர்வாகத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது வேளாண் வளர்ச்சிக்கான திட்டங்கள்.

*நாட்டின் பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்தின் முதுகெலும்பாக திகழும் வேளாண் துறை நமது தேசத்தின் அடையாளமாகவும் உள்ளது.*

*உணவு உற்பத்தியில் முன்னணியில் திகழ வேண்டும் என்ற நோக்கில் விவசாயிகளின் நலனுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது.*

*கடந்த 11 ஆண்டுகளில் வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீடு 22 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து 1 லட்சத்து 37 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.*

*பிரதமர் திரு நரேந்திர மோடி சுதந்திர தினத்தன்று புதுதில்லி செங்கோட்டையில் தேசிய கொடியை ஏற்றிவைத்து உரையாற்றுகையில்  விவசாயிகளின் நலனில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - மோடி தமிழ் - 13 செகண்ட்ஸ்)*

*வேளாண் விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை கடந்த 11 ஆண்டுகளில் 81 சதவீதத்திலிருந்து 221 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.*

*விவசாயிகளின் நிதி பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் வருவாய் ஆதரவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*இந்த திட்டத்தின்கீழ் 3 லட்சத்து 90 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலான தொகை கடந்த 6 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*சிறு குறு விவசாயிகளுக்கு மாதந்தோறும் 3 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இதன்மூலம் 25 லட்சம் விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.*

*வேளாண் கடன் அட்டைக்கான கடன் உச்ச வரம்பு தொகையும் 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.*

*இந்த கடன் அட்டை திட்டத்தின்கீழ் 10 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு வேளாண் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*வேளாண் கட்டமைப்பு நிதியம், பிரதமரின் பயிர்காப்பீட்டு திட்டம், தேசிய வேளாண் மின்னணு சந்தை திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை விவசாயிகளின் நலனுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.*

**<<<<>>>>**

தமிழகத்தில் தருமபுரி, வேலூர், தஞ்சை, நாகை உள்ளிட்ட மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர், திருவண்ணாமலை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, திருச்சி, திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலும் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக அந்த மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே ஆந்திர மாநிலத்தின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக கலவக்குண்டா நீர்த்தேக்கத்தில் இருந்து உபரிநீர் எந்த நேரத்திலும் வெளியேற்ற வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து வேலூர் மாவட்டம் பொன்னையாற்றில் நீர்மட்டம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் கரையோரங்களில் உள்ள கிராம மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி கேட்டுக்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பங்களாதேஷில் பரவி வரும் டெங்கு காய்ச்சலால் மருத்துவமனைகளில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

ஆஃப்கனிஸ்தானில் அனைத்துப் பிரிவுகளிலும் பெண்கள் கல்வி கற்க அனுமதிக்குமாறு தாலிபான்களை UNICEF அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

<<<<>>>>

சத்தீஸ்கட் மாநிலம் பிஜப்பூர் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 2 மாவோயிஸ்ட்கள் கொல்லப்பட்டனர்.

<<<<>>>>

நாட்டில் மொபைல் சேவையை விரிவுபடுத்த BSNL நிறுவனம் அஞ்சல் துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் உதகை சுற்றுவட்டாரப் பகுதியில் தேயிலை எஸ்டேட் மற்றும் தனியார் தோட்டங்களில் விதிகளை மீறி சுற்றுலா நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட வனத்துறை தடை விதித்துள்ளது.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஓராண்டு அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் மாணவர் சேர்க்கை இம்மாதம் இறுதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

கிருஷ்ணகிரி மாவட்டம் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டி மையத்தில் நாளை தனியார் துறையினர் சார்பில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளதாக ஆட்சியர் திரு. தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி வட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகளுக்கான மின்னணு சந்தைப்படுத்தல் பயிற்சி நடைபெற்றது.

<<<<>>>>

தேனி மாவட்டம் வைகை அணையில் இருந்து மதுரை மாவட்டத்தில் உள்ள ஒருபோக பாசன நிலங்களுக்கு இன்று முதல் 120 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

<<<<>>>>

சென்னை சென்ட்ரல்-செங்கோட்டை இடையே இயக்கப்படும் வாராந்திர சிறப்பு ரயில் இம்மாதம் 24ஆம் தேதி முதல் சேரன்மகாதேவி, கீழக்கடையம், பாவூர்சத்திரம் ஆகிய இடங்களிலும் நின்று செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

## *விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 102 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சண்டிகரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட்செய்த இந்திய அணி 49 புள்ளி 5 ஓவரில் 292 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

293 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, 40 புள்ளி 5 ஓவரில் 190 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றுள்ளன.

மூன்றாவது மற்றும் கடைசி போட்டி நாளை மறுநாள் புதுதில்லியில் நடைபெற உள்ளது.

<<<<>>>>

ஆஸ்திரேலியா ஏ அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் இந்தியா ஏ அணி தமது முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்புக்கு 116 ரன் எடுத்துள்ளது.

லக்னோவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் நாராயண் ஜெகதீசன் 50 ரன்னுடனும், சுதர்சன் 20 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

முன்னதாக ஆஸ்திரேலியா ஏ அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்புக்கு 532 ரன் எடுத்திருந்தபோது ஆட்டத்தை டிக்ளர் செய்தது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியில் தில்லி அணி 33-29 என்ற புள்ளிக் கணக்கில் தெலுகு அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் ஹரியானா அணி 43-32 என்ற புள்ளிக் கணக்கில் பட்னா அணியை வென்றது.

இன்று நடைபெற உள்ள போட்டிகளில் ஜெய்ப்பூர் - பெங்கால் அணியையும், மும்பை - புனே அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>